இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 161 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 08 – வியாழக்கிழமை 22 ஜனவரி 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 161 : Thiruvalluvar Year - 2057 - Thai 08 - Thursday 22 January 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## அவதூறு பரப்பி மாநில நிர்வாகத்தை முடக்க நினைக்கிறார்!

# அரசமைப்புச் சட்டக் கடமையை ஆளுநர் நிறைவேற்றவில்லை!

## பேரவையில் தீர்மானம் கொண்டு வந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜன. 22 -**

**சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் அவர்கள் தமது உரையை வாசிக்காமல் வெளியேறிய நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுகுறித்து தீர்மானம் கொண்டு வந்து உரையாற்றுகையில், “அரசமைப்புச் சட்டக் கடமையை ஆளுநர் நிறைவேற்றவில்லை” என்று கண்டனம் தெரிவித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று முன்தினம், ஆளுநர் அவர்கள் உரையை வாசிக்காமல் அவையிலிருந்து வெளியேறிய நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவந்து ஆற்றிய உரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மீண்டும் ஒரு முறை ஆளுநர் அவர்கள் சட்ட விதிகளையும், மரபுகளையும் மீறி செயல்பட்டு அவையிலிருந்து வெளியே சென்றுள்ளார்; வெளியே என்று சொல்வதைவிட, வெளியேறிச் சென்றிருக்கிறார். ஆளுநரின் செயல் அவர் வகிக்கக்கூடிய பதவிக்கு அழகல்ல. இந்திய அரசமைப்புச் சட்டம் Article 176ன்படி, ஆளுநர் உரை என்பது மாநில அரசால் தயாரிக்கப்பட்டு ஆளுநரால் முழுமையாகப் படிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதில் ஆளுநர் தனது சொந்தக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கோ, மாநில அரசால் தயாரித்து வழங்கப்பட்ட உரையில் நீக்கம் செய்வதற்கோ அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை.

### அரசமைப்புச் சட்டத்தை மீறிய செயல்!

அரசமைப்புச் சட்டத்தில் ஆளுநரின் உரை குறித்து தெரிவிக்கும் Article 176ல், தெளிவுரைகளைக் கேட்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை. இருப்பினும் நாம் அவர் அவ்வாறு சில விளக்கங்களைக் குறிப்பிட்டு அரசுக்கு நேற்று கடிதம் எழுதியதைத் தொடர்ந்து அவருக்கு அதற்கான பதிலும் அளிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆளுநர் அவர்கள் வேண்டுமென்றே அரசமைப்புச் சட்டத்தை மீறிய ஒரு செயலை செய்துள்ளார்.

ஆளுநரின் செயல் என்பது நூற்றாண்டு கால மரபையும், நீண்ட பாரம் பரியத்தையும் கொண்ட இந்த மக்கள் சபையை, அதன் மாட்சிமையை அவமதிக்கும் செயலாகும் என்றே நான் கருதுகிறேன்.

### அண்ணா – கலைஞர் வழியிலிருந்து எப்போதும் நான் விலகியதில்லை!

10.4.2023 அன்று இதே பேரவையில் நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கே நான் நினைவுகூர விரும்புகிறேன். “ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநர் பதவியும் தேவையில்லை” (மேசையைத் தட்டும் ஒலி) என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபோதிலும், அதை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழிமொழிந்தபோதிலும், அந்தப் பதவி இருக்கும்வரை அதற்குரிய மரியாதையைக் கொடுக்க அவர்கள் முதலமைச்சர்களாக இருந்த நேரத்தில் தவறியதில்லை. அவர்களது வழியைப் பின்பற்றி நானும் அதிலிருந்து இம்மியளவும் விலகியதில்லை; இந்த அரசும் தவறியதில்லை.” என்று அன்றைக்கு நான் எடுத்துரைத்தேன். அந்தக் கொள்கையை யொட்டியே நான் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்த வேண்டும் என்று நடவடிக்கை எடுக்க ஆணையிட்டேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.1.2026) சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டம் Article 176ன்படி தமிழ்நாடு அரசால் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்ட உரையை பேரவையில் படிக்காமல் தாமே தயாரித்த உரையை படித்ததை இப்பேரவை ஏற்கவில்லை என்ற தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

## ஆளுநரின் செயல் – வகிக்கும் பதவிக்கு அழகல்ல!

### அரசியல் பேசி அவதூறு பரப்பும் ஆளுநர்!

எனினும், ஆளுநர் அவர்கள் ஏற்கெனவே நடந்துகொண்டது போலவே மீண்டும் இன்று செயல்பட்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. தமிழ்நாடு சட்டமன்றம், எட்டரைக் கோடி தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற மாமன்றம். ஆளுநர் என்பவர் மாநில நலனில் அக்கறை கொண்டவராக, மக்கள் மேம்பாட்டில் ஆர்வம் கொண்டவராக, உண்மையைப் பேசுபவராக இருக்க வேண்டும். மக்களுடைய பேராதரவோடு, பெரும்பான்மையோடு வெற்றிபெற்று ஆட்சி அமைத்துள்ள அரசு எடுக்கின்ற முடிவுகளுக்கு ஒத்துழைப்பவராக இருக்க வேண்டும். அதைத்தான் அரசமைப்புச் சட்டமும் அந்தப் பதவி வகிப்பவரிடம் இருந்து எதிர்பார்க்கிறது. ஆனால் நம்முடைய ஆளுநர் அவர்கள் அதற்கு மாறாகச் செயல்படுகிறார். மாநில நிர்வாகத்தை முடக்கவும், பொது மேடைகளில் அரசியல் பேசியும் அவதூறு பரப்பி வருகிறார். அது அவரது சொந்த விருப்பம் என்று கருதலாம்.

### பேரவையின் மாண்பைப் பாதுகாக்க தீர்மானம்!

எனினும், அத்தகைய ஒரு முயற்சியை இங்கும் செய்ய அவர் முனைவது ஏற்புடையதல்ல. நூற்றாண்டு விழா கொண்டாடி, சீரோடும், சிறப்போடும்


தொடர்ச்சி 2 ஆம் பக்கம்


## இந்தியா முழுவதும் அரசியல் கட்சிகளின் துணையோடு

# ஆளுநர் உரை மரபை மாற்றிட நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜன. 22 -**

**“ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை விலக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகளை இந்தியா முழுவதும் இருக்கும் ஒத்த கருத்துக்களைக் கொண்ட அரசியல் கட்சிகளின் துணையோடு இந்திய நாடாளுமன்றத்தில் தி.மு.கழகம் முன்னெடுக்கும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் தாம் கொண்டு வந்த தீர்மானம் உறுப்பினர்களால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதற்கு நன்றி தெரிவித்து உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.**

பேரவையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தந்த உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை வருமாறு :-

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தின் மாண்பைக் காத்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டுதோறும் அரசின் சார்பில் உரை தயாரித்து அனுப்புவதும், அதனை முறையாக வாசிக்காமல் ஆளுநர் அவர்கள் முரண்டு பிடிப்பதும் தொடர்ந்து வருவது நல்லதல்ல. ஆளுநர்கள் மாநில அரசுகளுக்கு இடைஞ்சலாக இருந்து இப்படி செயல்படுவது இங்கு மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களிலும் நடந்து வருகிறது. ஒரு நாள் செய்தியாக இதனை கடந்துவிட முடியாது. ஆண்டின் தொடக்கத்தில் அரசின் கொள்கை அறிக்கையை ஆளுநர் அவர்கள் முறையாக வாசிப்பது நடைமுறை. அந்த நடைமுறையை ஒருவர் தொடர்ந்து மீறும்போது அதுபோன்ற விதிகளை எதற்காக வைத்திருக்க வேண்டுமென்ற கேள்வி சாதாரணமாகவே அனைவரின் மனதிலும் எழும்.

### சட்டத்தைத் திருத்த நடவடிக்கை!

**எனவே, ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை விலக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகளை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா முழுவதும் இருக்கும் ஒத்த கருத்துகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் துணையோடு இந்திய நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுக்கும்** என்ற உறுதியையும் இந்த மாமன்றத்தில் அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி கூறி அமைகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.